# உலக மக்களுக்கு முருகப்பெருமானின் உபதேசம்

முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 829

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

05.01.2022, புதன்கிழமை

1. யோகராஜனே அரங்கா போற்றி
   **உயிர்கொலை நீக்கி** உலக மக்கள்வாழ
   வகையான தர்மஞானவழி காட்டும்
   வள்ளலே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (பிலவ வருடம் மார்கழி மாதம் 21ம் நாள், 05.01.2022 புதன்கிழமை)
   வரங்களென உன் தர்மபலத்தைக்கொண்டே
   வையகத்தையே ஆறுமுகன் வடிவமைக்க உள்ளேன்
3. உள்ளபடி அரங்கன் உன்வழி உலகம் வந்தால் போதும்
   **உயிர்கொலை நீக்கி** சைவ நெறியில் நின்றால் போதும்
   வல்லமைபட இந்த உலகம் மாற்றங்கண்டு
   வடிவேலன் என் ஞான ஆட்சியாக அமையக்கூடும்
4. கூடவே ஆறுமுகனாக குறையில்லாத அரங்கனாக சர்வ சூட்சுமமாக
   நாடெங்கும் அரங்கன் நாமஜெபம் பரவ
   ஞானிகள் பேரில் முழு தர்மம் தொடர
   வானவர்களும் மகிழ்ந்து வரங்கள் கூட்டி உலகமக்களுக்கு
5. மக்களுக்கு யோகமான பலன்கள் பல தந்து உயர்த்துவர்
   மகத்துவம்பட மரணத்தை வென்றும் காப்பர்
   காப்புதரும் யோக ஞானி அரங்கன் கருணையே உலகை மாற்றும்
   ஒப்புகொண்டு அரங்கன் வழிவர
6. **உலகையே இந்த உபதேசங்கள் மாற்றும்**
   உயர்வான அரங்கனுக்குள் யானிருக்க
   இருக்கவே அரங்கன்திருவடியோடு தீட்சைபெறும் மக்களுக்கெல்லாம் ஞானவாழ்வு
   மறுமை வெல்லும் வண்ணம் வந்து சிறப்பு காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

உயிரினங்களுக்கு முதல் ஆகாரம் தண்ணீர். அடுத்து மனிதர் முதல் கால்நடைகள் வரை ஆகாரம் தாய்ப்பால். பால் பொருட்களான பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் மனிதர்களுக்கு பயன்பெறும். இதுபோக அரிசி, கோதுமை, சோளம் முதலான தானியங்கள், செடி வகை காய்கறிகளான கத்திரிக்காய், தக்காளி, வெண்டைக்காய், சுண்டைக்காய் போன்ற காய்கறிகள், மரவகை காய்கறிகளான எலுமிச்சை, நார்த்தங்காய், தேங்காய், நொங்கு போன்ற உணவு வகைகள், கொடி வகை காய்கறிகளான அவரைக்காய், சுரைக்காய், பூசணி, பரங்கிக்காய் போன்ற காய்கறிகள், புல்வகை உணவுகளான கீரை வகைகள், பருப்பு வகைகளான, நிலக்கடலை, துவரம்பருப்பு, பாசி பருப்பு, பாதாம் பருப்பு, முந்திரி, பிஸ்தா போன்ற உணவு வகைகள், பூவகை உணவுகளான, காலிபிளவர், வாழைப்பூ போன்ற உணவுவகைகள், கிழங்கு வகை உணவுகளான, உருளைக்கிழங்கு, சர்க்கரைவள்ளி, கருணைக்கிழங்கு, மரவள்ளி கிழங்கு, பனங்கிழங்கு போன்ற உணவுவகைகள், கனி வகைகளான, மா, பலா, வாழை, கொய்யா, மாதுளை, ஆப்பிள் போன்ற கனிவகை உணவுகள், நீர்வகை உணவுகளான தென்னை மரத்து இளநீர், பனைமரத்து பதநீர், தேயிலை, காபி போன்ற திரவ உணவுகளும், காளான் போன்ற உணவுகள், இதுபோன்ற வகைவகையான உணவுகளை இயற்கை கடவுள் மனித வர்க்கத்திற்கு கொடுத்தும், இதை விட்டுவிட்டு வாயில்லா ஜீவன்களான, ஆடு மாடு, கோழி பன்றி, ஒட்டகம் போன்றவற்றை பலி கொடுத்தும், கொலை செய்தும் உணவாக சாப்பிடுவது நியாயமா? என்பதை உணரவேண்டும் என்று மனிதவர்க்கத்தை பார்த்து முருகப்பெருமான் கேட்கிறார். இதை மனித வர்க்கம் சிந்திக்க வேண்டும். முருகப்பெருமானின் ஆசியை பெற விரும்பும் மக்கள் சுத்த சைவ உணவினை மேற்கொள்ள வேண்டும். இந்த கொள்கையை கடைப்பிடிக்காத மக்களுக்கு நச்சுக்கிருமிகளால் பாதிப்பும் இடையூறும் வரும் என்பது மகான் முருகப்பெருமானின் அருளுபதேசமாகும். இந்த உபதேசத்தை கடைபிடிக்கும் மக்கள் நீடிய ஆயுளையும், ஆரோக்யமான வாழ்வையும் பெறுவார்கள். கடவுள் ஆசி பெற விரும்புகின்ற மக்கள் உயிர்கொலை செய்வதை தவிர்த்து, புலால் உணவினை மறுத்து சுத்தசைவ உணவினை மேற்கொண்டு வரும் சன்மார்க்கவாதிகளை காப்பதற்காக முருகப்பருமானின் தலைமையில் ஞானிகளின் ஆட்சி அமையப்பெறும். ஞானிகளின் ஆட்சியில் நச்சுக்கிருமிகள் கட்டுப்படும். நச்சுக்கிருமிகளால் மனித வர்க்கத்திற்கு இடையூறு வராது.

மனித வர்க்கத்திற்கு உகந்தது தாவர வகை உணவுகளே! புல், செடி, கொடி, மரம், கிழங்கு வகை உணவுகளே!

1. அற்புத மணிவாசகர் அருளினை போற்றிட
   கற்பக விருட்ஷம் கைவசமாமே
2. தாயாம் மணிவாசகர் தந்த வாசகம்
   வாயார போற்றியே மகிழ்வோம் நாமே
3. நஞ்சினுங்கொடிய நச்சுக்கிருமிகள்
   அஞ்சியே நடுங்கும் மணிவாசகர் அருளினைப்போற்றிட
4. முற்றும் உணர்ந்த முனிவர் வாசகம்
   பற்றுடன் போற்றிட பரகதி கூடுமே
5. அய்யன் மணிவாசகர் அருளினைப் போற்றிட
   வையகம் போற்ற வாழ்வார் நலமே
6. எந்தை மணிவாசகர் இணையடி போற்றிட
   சிந்தையும் தெளிய சிவமது ஆவாரே

7. மனமாயை அற்ற மாமுனிவர் திருவடியை
நலமாக போற்றிட நாளும் சித்தியே
8. பிறப்பை வென்ற பெருந்தகை வாசகர்
சிறப்புடன் போற்றிட சித்தியும் உண்டாம்
9. இடரும் இருவினை இடரா அகலுமே
தொடரும் மணிவாசகர் தோத்திரம் செய்திட
10. வள்ளல் மணிவாசகர் வணங்கியே போற்றிட
கல்லாதவரும் காண்பார் பேரின்பமே
11. மனமாயை அற்ற மாமுனிவர் திருவடியை
தினமும் போற்றிட சித்தியும் உண்டாம்

ஓரைந்தும் ஆறும் ஓதிய புகழுரை
ஈரைந்தும் ஒன்றாய் இயம்பினார் ஈசனே!

–முருகனடிமை ஓங்காரக்குடிலாசான்